## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை - 2022

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கிடைத்த முன்னைய ஆண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 294,619,184 தொகை திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்கு பதிலாக மீளாய்வாண்டின் வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | இந்தத் தவறு எதிர்வரும் இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது கவனத்திற்கொள்ளப்பட்டு சரியான கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எனினும் கணக்குகளில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள பதிவுகளின் மூலம் இறுதி நிதி நிலைமைக் கூற்றில் அதன் தாக்கம் ஏற்படவில்லை. | உரிய கணக்குகளில் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,540,980 பெறுமதியான பொருட்கள் உரிய நிலையான சொத்துக் கணக்கில் வரவு வைப்பதற்கு பதிலாக இருப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | இந்தத் தவறு நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்வதற்கு குறிப்பிடுகின்றோம். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் மூலதன மானியத்திற்கான காலக்கழிவு பெறுமதி ரூபா 8,157,492 ஆக இருந்த போதும் ரூபா 6,308,137 சீராக்கப்பட்டதன் காரணமாக காலக்கழிவு ரூபா 1,849,292 குறைத்துக் சீராக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | இணக்கக்கூற்றில் பூகோள தகவல் முறைமைச் செலவினமாக ரூபா 10,050,000 பாதீட்டு நிதி ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக மீளாய்வாண்டில் எந்தவொரு செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்றிட்டத்தை அமுல்படுத்துதல் முறையான பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட வெளித்தரப்பினர் மூலம் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் எழுந்திருந்த பிரச்சினைகளின் காரணமாக தற்போது சபையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களை பயன்படுத்தி செயற்றிட்டத்தின் ஒரு பகுதியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதுடன் செயற்றிட்டத்தின் உரிய செலவின முகாமைத்துவத்தைச் செய்து செலவினங்களைச் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் அந்த செவினங்களின் அடிப்படையில் கடன்கொடுத்தோராக ஒதுக்கப்பட்ட தொகை தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் மிகுதி தொகை இருக்குமாயின் கடன்கொடுத்தோரில் இருந்து பதிவழிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (உ) | உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கடன் பெறுதல் 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மிதியாக ரூபா 103,565,540 காண்பிக்கப்பட்டிருந்த போதும் நிதி நிலைமைக் கூற்றில் குறுங்காலக் கடன் (நடைமுறை) மீதியாக ரூபா 21,973,002 தொகையும் நீண்டகாலம் அல்லாத கடன் | எதிர்வரும் இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சரியாக வகைப்படுத்தலுடன் சமர்ப்பிக்கப்படும். | வகைப்படுத்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

(நடைமுறையல்லா) மீதியாக ரூபா 81,592,538 தொகையும் ஆக காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 50,724,246 பெறுமதியான 02 சொத்துக் கணக்குகளின் மீதிகள் மற்றும் ரூபா 7,737,850 பெறுமதியான பொறுப்புக் கணக்கிற்காக அவற்றுக்குரிய பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | பரீட்சித்து தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) (i) | நிதிப்பிரமாணம் 396 | செலுத்துவதற்கு காணப்பட்ட போதும் செல்லுபடிக் காலம் முடிவடைந்த ரூபா 2,398,783 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 396 இல் குறிப்பிட்ட பிரகாரம் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | வைப்புச் செய்யப்பட்ட திகதியில் இருந்து 02 வருடங்களை விஞ்சிய ரூபா 2,533,095 பெறுமதியான வைப்புக்கள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | காலாவதியான வைப்புக்களுக்காக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏனைய சுற்றறிக்கை 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் 2008.01.25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | பொருட்களின் வகைப்படுத்தலின் பிரகாரம் சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப் படவேண்டிய 508 கைத்தொழில்களில் இருந்து 26 அனுமதிப்பத்திரங்கள் மாத்திரம் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | தற்போது 2023 ஆம் ஆண்டிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் முறையான பிரகாரம் விநியோகிக்கப்படுகின்றது. | அனுமதிப் பத்திரம் பெறாத நிறுவனங்களைக் கண்டறிந்து அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மேல் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் 2012 யூலை 01 ஆந் திகதிய டபிள்யூபி/எல்ஜீடீ/01/2012 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றிக்கையின் XVI ஆம் பந்தியின் ஆலோசனையின் பிரகாரம் அந்தத் திட்டமிடல் குழு ஆகக்கூடியது இரண்டு மணித்தியாலங் களுக்கு மேல் நடாத்த வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக உறுதிப்பத்தலின்றி சில உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 305,213,090 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 161,796,825 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வங்கி நடைமுறைக் கணக்கில் திசெம்பர் 31 ஆந் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வங்கிக் கட்டணம் மற்றும் நேரடியாக வங்கிக்கு வரவு வைத்தல் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 106,216 தொகையும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 4,587 தொகையும், 2022 ஆம் ஆண்டில் ரூபா 1,575 தொகையும் காணப்பட்டதுடன் அந்த மீதியை உரியவாறு இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020/2021 ஆம் ஆண்டு களின் போது வங்கியினால் வழங்கப்பட்ட வங்கிக் கூற்றின் பிரகாரம் நேரடி வங்கி வரவு வைத்தல் இனங்காணப்பட்டதுடன் அது இணையவழி முறைமையின் கீழ் ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | உரிய தீர்த்து வைத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

(மேலதிக நேரம்/ விடுமுறை தின சம்பளம்) உள்ளடக்கிய போதும் இரு தடவை குறிப்பிடப்பட்டமையால் ஏற்பட்ட மேலதிக செலுத்துதல் ஆகும். இது தொடர்பான விபரங்களை பெற்று தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 |
| (i) | ஆதன வரியும் வரியும் | 248,500 | 256,056 | 207,781 | 173,684 | 252,600 | 232,669 | 246,987 | 136,885 |
| (ii) | வாடகை | 74,181 | 75,250 | 77,390 | 31,776 | 54,654 | 38,799 | 60,899 | 45,006 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 20,500 | 27,555 | 27,570 | - | 10,000 | 5,239 | 28,062 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 114 | 106 | 115 | 3 | 1,059,805 | 4,312 | 877,070 | 4,247 |
| | மொத்தம் | 343,295 | 358,967 | 312,856 | 205,463 | 1,377,059 | 281,019 | 1,213,018 | 186,138 |

**2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடவேண்டிய ஆதனவரி மீதி ரூபா 158,305,993 ஆக இருந்ததுடன் அதில் வருடாந்த ஆதனவரிப் பெறுமதி ரூபா 50,000 இனை விஞ்சிய வீடுகள், வெற்றுக் காணிகள் மற்றும் வியாபார | சிவப்பு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளது. நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை ஆதனவரி அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலையங்களில் 477 வாடிக்கையாளர்களிடமிருந்து ரூபா 63,065,594 அறவிடவேண்டி இருந்தது. | | |
| (ஆ) | ஜனஜய சிட்டி சுப்பிரி சந்தைத் தொகுதியில் 10 ஆவது மாடியில் உள்ள சினிமா மண்டபத்தில் 2018 நவம்பர் முதல் வாடகை ரூபா 3,879,571 தொகையும், சந்தைத் தொகுதியில் உள்ள ஏனைய 219 கடைகளில் இருந்து அறவிடவேண்டிய நிலுவை வாடகை ரூபா 17,402,694 தொகையும் காணப்பட்டது. | 219 கடைகள் முத்திரை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதுடன் இதுவரையில் அநேகமான கடை உரிமையாளர்கள் குறித்த பணத்தை செலுத்தி முத்திரை இடுவதை விலக்கிக் கொண்டுள்ளனர். | அறவிட வேண்டிய வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | ஜனஜய சிட்டி நவீன சந்தைத் தொகுதியின் 14 கடைகள் நீண்டகாலம் முதல் வெற்றிடமாகக் காணப்பட்டமையால் அதன் மூலம் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மிகுதி 11 கடைகளும் கேள்வி கோரப்பட்டுள்ளதுடன் அந்த கடைகளின் மதிப்பீடைப் பெற்றுக் கொள்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | ஜனஜய சிட்டி சந்தைத் தொகுதியை வாடகைக்கு வழங்கப்படாத கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான உபாய வழிகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | கோட்டே மாநகர சபையினால் 2015/2016 ஆம் ஆண்டுகளில் வீடற்ற நபர்களுக்காக வாடகை அடிப்படையில் அங்கம்பிட்டியவில் வீடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 03 வருடங்கள் அளவிலான காலத்தில் இருந்து வாடகை செலுத்தாக 03 வீட்டு உரிமையாளர்களிடமிருந்து சபைக்கு அறவிட வேண்டிய வீட்டு வாடகையின் அளவு ரூபா 173,500 ஆகும். | 2022.09.09 முதல் நானாவித வருமானப் பிரிவில் கழிவுப் பொருள் வரி அறவிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது டன் நிலுவை வரி அறவிடப்படும். | நிலுவை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு சபை அதிகாரப் பிரதேசத்தில் வியாபார நிலையங்களில் இருந்து அறவிட வேண்டிய கழிவுப் பொருள் வரி மீதி ரூபா 4,001,126 ஆகும். | 2022.09.09 முதல் நானாவித வருமானப் பிரிவில் கழிவுப் பொருள் வரி அறவிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது டன் நிலுவை வரி அறவிடப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகார தரப்பினரிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நீதிமன்றத் தண்டப் பணத்திற்காக பட்டோலைகள் தயாரித்து வருமானங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படா திருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக நீதிமன்ற தண்டப்பணத்தின் மூலம் கிடைக்கவேண்டிய வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற தண்டப்பணத்தை அறவிடுவதற்காக தற்போது ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் தற்போது அமுல்படுத்தும் நிலையில் காணப்படுகின்றது. | -மேற்படி- |
| (எ) | ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டண பட்டோலை தயாரிக்காமையின் காரணமாக ஆண்டிற்குரிய சரியான நிலுவையை இனங்காணமுடியாதிருந்தது. | அந்த குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய பட்டோலைகளைத் தயாரித்து நிலுவை இனங்கண்டு அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கைத்தொழில் வரி மற்றும் வர்த்தக வியாபார வரியின் கீழ் ஆதனங்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தற்போது வியாபார மெய்மையாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் வரியை அறவிடல் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய பணத்தை உரிய பிரகாரம் அறவிடல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 9.8 ஆம் பிரிவின் பிரகாரம் இலத்திரனியல் ஊடகத்தில் கேள்வி சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்கப்படாதிருந்த போதிலும் இலத்திரனியல் தபால் மூலம் கூறுவிலைகள் பெறப்பட்டு ரூபா 5,136,200 பெறுமதியான கணனி மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | 2016 இன் 19 ஆம் இலக்க திலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் மூலம் இலத்திரனியல் ஊடகத்தில் கேள்வி சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமையும் கொவிட் தொற்று நோய் நிலைமையினால் நாட்டில் காணப்பட்ட சிக்கலான நிலைமையின் இடையே தபால் நடவடிக்கைகள் உரிய பிரகாரம் செயற்படாமையின் | இலத்திரனியல் பெறுகைகள் மேற்கொள்வதாயின் கேள்விகளின் இரகசியத் தன்மையைப் பாதுகாப்பதற்கு உரிய கட்டுப் பாட்டு முறைமை பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையில் இலத்திரனியல் தபால் இதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | |
| (இ) | சபைக்கு சொந்தமான 2020 இற்கு முன்னர் காணப்பட்ட காணி கட்டிடங்கள் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மதிப்பீட்டு பெறுமதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் கணக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்று கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | ஜனஜய சிட்டி கட்டிடத்தை காப்புறுதி செய்வதற்காக ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த இலங்கை காப்புறுதி நிறுவனம் சபையின் காப்புறுதி நடவடிக்கைகளில் இருந்து விலகுவதற்கான காரணம் பொதுச் சபைத் தீர்மானத்தில் குறிப்பிடப்படாதிருந்ததுடன் சபையினால் முறையான கேள்வி மதிப்பீடின்றி ஜனஜய சிட்டி கட்டிடத்திற்காக ஆகக் குறைந்த விலை குறிப்பிட்ட ஐந்தாவது கேள்வி தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் இணங்கப்பட்ட பெறுமதிக்கு மேலதிகமாக ரூபா 491,221 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் சகல மாதிரிகளையும் பூர்த்தி செய்த காப்புறுதிக் கம்பனி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கேள்வி செயற்பாடுகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு பரிந்துரையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது. | பெறுகை விதிகளின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையில் சேவையாற்றிய வைத்தியர் இடமாற்றம் பெற்று சபையிலிருந்து விலகிச் சென்றதுடன் அவருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட மேலதிக நேர படி ரூபா 716,919 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை | வைத்தியரால் சபையில் சேவையாற்றி மேலதிகமாக பெறப்பட்ட மேலதிக நேர தொகை ரூபா 716,919 இனை இனங்காணப்பட்டுள்ளதுடன் அதில் அவர் செலுத்துவதற்கு இருந்த | மேலதிகமாக செலுத்தப்பட்ட பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 மாத மேலதிக நேரப் படி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக இடமாற்றம் பெற்றுச் சென்ற உரிய வைத்தியருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதித் தொகை அவர் சேவையாற்றுகின்ற புதிய சேவை நிலையத்திற்கு அறிவித்து நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) சாதாரண விடுமுறைகள் முடிவடைந்து சம்பளமற்ற விடுமுறை பெற்ற 17 ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்கு இருந்த தொகையான ரூபா 244,405 அறவிடப்படடிருக்கவில்லை. | 2022.10.25 ஆம் திகதிய உள்ள சுற்றறிக்கை இலக்கம் 06/2022 இன் கீழ் முறையான பிரகாரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறைகளை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக நகர ஆணையாளரால் காண்பிக்கப்பட்டுள்ளது. சம்பளமற்ற விடுமுறை பெற்ற ஊழியர்களிடமிருந்து உரிய பணத்தை அறவிடுவதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உரிய பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீண்ட காலத்திலுந்து அறவிடப்படாதுள்ள ரூபா 2,171,860 பெறுமதியான ஊழியர் கடனை அறவிடல் தொடர்பாக சபை முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இடமாற்றம், ஓய்வு பெற்றுச் செல்லல், சேவையை விட்டுச் செல்லல் மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர்களினால் ஏற்பட்ட வெற்றிடம் ஆகும். | அறவிட வேண்டிய பணத்தை மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |